11.04.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.205 /2018

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவி | | |
| த/பெ | காண்டீபன் | மதம் | |
| கிராமம் | சித்தேரிகரை | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 45/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## முதல் விசாரணை

நான் சித்தேரிகரையில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் ரயில்வே ஸ்டேஷனில் டீ வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2015ல் நான் ரயில்வே ஸ்டேஷனில் உப்புமா வியாபாரம் செய்தேன். எனக்கு இந்த வழக்கில் என்னுடன் வியாபாரம் செய்து வந்த சுரேஷ் என்பவரை எனக்கு தெரியாது. ஆனால் இந்த வழக்கில் இறந்துபோன ரயில்வே ஸ்டேஷனில் புத்தக வியாபாரம் செய்து வந்த ஜெயவேலுவை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் 2014 ஆண்டு மே மாதம் புதன் கிழமை நடந்தது. காலை 7.30மணி இருக்கும். திருச்செந்தூர் இருந்து சென்னை செல்லும் ரயில் வண்டியை எதிர்பார்த்து உப்புமா விற்க காத்துக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் 2ம் எதிரி பாலமுருகன் என்பவர் ஜெயவேலுவை கூப்பிட்டுக்கொண்டு வந்தார். அங்கு 2,3 காவல் துறையினர் மற்றும் பொதுமக்கள் கூடியிருந்தார்கள். நான் என்னவென்று ஓடி சென்று பார்த்தபோது ஜெயவேலு பர்ஸை திருடிவிட்டார் அது குறித்து வீட்டில் தகவல் சொல்லவேண்டும் எனவே ஒரு கையெழுத்து போடுங்கள் என என்னை கேட்டார்கள். அதனால் நான் அதில்

கையெழுத்து போட்டேன். அதன்பிறகு ரயில்வே காவல்நிலையம் சென்று நான் கையெழுத்து போட்டேன். நான் லோகு என்பவரிடம் சென்று லோகுக்கு நெம்பர் இருந்தால் சொல்லுங்கள் அவர் வீட்டிற்கு தகவல் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அவரது நெம்பர் இல்லை என்று கூறிவிட்டார்கள். மறுநாள் திருச்சியில் இருந்து பெரிய அதிகாரிகள் வந்தார்கள். அவர்கள் கையெழுத்து குறித்து கேட்டார்கள். நான் ஜெயவேலுவை பார்த்தேன். ' அவர் காவல்நிலையத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்துக்கொண்டிருந்தார். அப்போது பெரிய அதிகாரி என்னிடம் ஜெயவேலுவை காட்டி இவர் யார் என்று தெரியுமா என கேட்டார். நான் ரயில்வே நிலையத்தில் புத்தகம் விற்கிறார் என கூறினேன். எதிரி இன்ஸ்பெக்டர் தான் என்னை கையெழுத்து போட சொன்னார் என்று அவரிடம் சொன்னேன். குற்ற எண்.25/2014ல் ஜெயவேலு என்பவரை இ.த.ச பிரிவு 379ல் கைது செய்தபோது கைது குறிப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கைது குறிப்பாணை அ.சா.ஆ.5 ஆகும். அதன் பிறகு நான் வந்துவிட்டேன். மறுநாள் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். வேறு எந்த காரணத்திற்காகவும் நான் காவல்நிலையம் செல்லவில்லை. அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் திருச்சி ரயில்வே டிஎஸ்பி ' என்னை விசாரித்தார்கள். நான் இப்போது சொன்னதுபோல தான் அவர்களிடம் சொன்னேன். வேலூர் சிபிசிஐடி ஆய்வாளரும் என்னை விசாரித்தார். நான் நீதிமன்றத்தில் 'சாட்சியம் அளிக்க செல்லவில்லை. ஜெயவேல் இந்த சம்பவத்திற்கு முன்பு என்னை சந்தித்து வேறு எந்த விபரமும் சொல்லவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுககு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு இந்த வழக்கில் இறந்துபோன ஜெயவேல் தள்ளுவண்டியில் வியாபாரம் செய்யும் சுரேஷ் நெருங்கிய நண்பர்கள் என்றும், கடந்த 6.5.2014 தேதி ஜெயவேல் என்பவரை எதிரி பாலமுருகன் காலை 7.40மணியளவில் லத்தியால் ஓங்கி பட்டு பட்டு என்று அடித்து காவல்நிலையம் அழைத்து சென்றார் என்றும், அங்கு 11மணிக்கு எனது நண்பர்களான துரை, சுரேஷ் ஆகியோர் தகராறு செய்துக்கொண்டு சுரேஷ்யை துரை

தாக்கியது சம்மந்தமாக சுரேஷ் ரயில்வே காவல்நிலையத்தில் புகார் அளித்தது சம்மந்தமாக 1ம் எதிரி திருகுமரன் பிளாட்பாரத்தில் வந்து எனது நண்பர் துரையை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்ததாகவும் அவரை பார்க்க 12மணிக்கு நான் காவல்நிலையம் சென்றதாகவும், அங்கு துரையை கட்டி வைத்திருந்தார்கள் என்றும், அதன் அருகே ஜன்னல் கம்பியில் செயின்போட்டு ஜெயவேல் என்பவரை கட்டி வைத்திருந்தார்கள் என்றும், திருக்குமரன் போலீஸ்காரர் ஜெயவேலின் தலை, உடம்பு ஆகிய இடங்களில் ஒரு பிளாஸ்டிக் பைப்பால் அடித்துக்கொண்டிருந்தார் என்றும், அப்போது ஜெயவேல் அடிக்காதீர்கள் என்று கத்திக்கொண்டிருந்தார் என்றும், அப்போது நான் துரைக்கு தோசை வாங்கிகொடுத்துவிட்டு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மறுநாள் 7.5.2014 தேதி காலை 7மணியளவில் நான் காவல்நிலையம் வந்தேன் என்றும், அப்போது ஜெயவேல்' காவல்நிலையத்தின் ஆயுத அறைக்கும், கைது அறைக்கும் இடையே தலை தொங்கியவாறு உட்கார்ந்திருந்தார் என்றும், அவரை பார்க்கும்போது வெறும் மூச்சு மட்டும் வந்துக்கொண்டிருந்தது என்றும், நான் துரையை பார்த்து எப்போது தான் உன்னை அனுப்புவார்கள் என்று கேட்டேன் என்றும், அதற்கு அவர் மச்சான் என்னை சீக்கிரமாக அழைத்து சென்றுவிடு இரவு முழுவதும் ஜெயவேலுவை அடித்தார்கள் என்றும், அவர் கைலியிலேயே சிறுநீர் போய்விட்டார் என்றும் , அப்போது அங்கு ஒரு எஸ்எஸ்ஐ என்னை கூப்பிட்டு துரையின் அ்ம்மா, அப்பா யாராவது இருந்தால் வர சொல்லுங்கள் அவரை அனுப்பி விடுகிறோம் என சொன்னார் என்றும்,நான் அவருடைய சித்தப்பா மூர்த்தி என்பவருக்கு தகவல் சொல்லிவிட்டு சென்றுவிட்டேன் என்றும், அன்று 10.30மணியளவில் துரையை அவரது அம்மா மற்றும் மனைவி அழைத்து செல்வதை நான் பார்த்தேன் என்றும், அப்போது நான் காவல் நிலையம் சென்றேன் என்றும் அங்கு காவல்நிலையத்தில் ஜெயவேல் இல்லை என்றும், அப்போது தான் கைது குறிப்பாணையில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், பின்னிட்டு போலீசார் ஜெயவேலுவை அடித்ததால் தான் இறந்துவிட்டார் என தெரிந்துக்கொண்டேன் என்றும், 10.5.2011 தேதி நீதித்துறை நடுவர் முன்பு நான் ஆஜராகி நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், திருச்சி போலீஸ் இன்ஸ்பெக்டர், திருச்சி ரயில்வே டிஎஸ்பி ஆகியோர் பதிவு செய்துள்ள வாக்குமூலத்தில்

உள்ளதுபோல் 7.5.2014 அன்று ரயில்வே நடைமேடை எண்1ல் யாரையும் அவனை பிடியுங்கள் என சொல்லி துரத்திக்கொண்டு ஓடவில்லை என்றும், நானும் ஓடவில்லை என்றும், யாரும் தண்டவாளத்தில் சிலிப்பர் கட்டை தடுத்து கீழே விழுந்து எழுந்து ஓடவில்லை என்றும், அதனால் உடம்பில் காயம் யாருக்கும் ஏற்படவில்லை என்றும், இந்த சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு ஜெயவேல் மற்றும் ஒருவர் என்னிடம் வந்தனர் என்றும் அதில் ஜெயவேல் அண்னே நேற்று என்னை விழுப்புரம் காவல் ஆய்வாளர் மற்றும் டிரைவர் திருக்குமரன் மற்றும் போலீஸ்காரர் கோலியனுர் கரும்பு தோட்டத்திற்கு கூப்பிட்டு சென்று கண் மண் தெரியாமல் இஸ்டத்திற்கும் அடித்தார்கள் என்று சொல்லி அவரது பிருஷ்ட பகுதியை காண்பித்தார் என்றும், நானும், இன்னொருவரும் அவரது பிருஷ்ட பகுதியை பார்த்தோம் என்றும், மருத்துவமனை சென்று ஊசி மருந்து போட்டால் தான் சரியாகும் என்று சொன்னோம் என்றும், எதற்கு அடித்தார்கள் என்று ஜெயவேலுவை கேட்டதற்கு அவர் என்னிடம் காசு கேட்டு அடித்தார்கள் என்று சொன்னார் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல.6,7 தேதிகளில் நடந்தவற்றை மாற்றி ரயில்வே போலீசாரும், திருச்சி டிஎஸ்பியிடம் நான் எதுவும் சொல்லவில்லை என்றும், ஆனால் நீதித்துறை நடுவரிடமும், வேலுர் சிபிசிஐடி காவல்துறையினரிடமும் நான் உண்மையை சொன்னேன் என்றும் என்னை அவர்கள் விசாரித்தார்கள் என்றும், அவர்களிடம் மேற்கண்ட சம்பவங்கள் குறித்து நான் உண்மையை கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.